<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>

<u>O.S. No. 235 of 2019</u>

<u>நாள்.05.08.2026</u>

<u>வா.சா. 1</u>- ஜானகிராம்

<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ராமசுப்பு நாயக்கர் எனது தந்தை என்றால் சரிதான். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 2 ம் தபசில் சொத்து எனக்குப் பாத்தியப்பட்டது என பரிகாரம் கேட்டுள்ளேன் அது சர்க்காருக்குப் பாத்தியப்பட்டது கிடையாது. எனக்குப் பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.1648/17. சர்வே எண்.1648/17 சொத்து சம்பந்தமாக நான் இந்த வழக்கில் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்து ஆரம்பத்தில் புஞ்சை இடங்களாக இருந்தது என்றால் ஆமாம். மேற்படி புஞ்சை இடங்களின் சர்வே எண்.1317/7 அதன் பிறகு பழைய நத்தம் புல எண்.1332/1 என மாற்றப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு புதிய நத்தம் புல எண். 1648 ல் பல உட்பிரிவுகளாக மாற்றப்பட்டது என்றால் சரிதான். புதிய நத்தம் புல எண். 1648 ல் பல உட்பிரிவுகளாக மாற்றப்பட்டபோது, 1 முதல் 17 உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் நான் 2 ம் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்து புதிய நத்தம் புல எண். 1648/9 என பதிவாகியுள்ளது என்றால் சரிதான். புதிய நத்தம் புல எண். 1648/9 வருவாய்த்துறை ஆவணங்களில் சந்து என பதிவாகியுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது தவறாக பதிவாகியுள்ளது. புதிய நத்தம் புல எண். 1648/7 எனக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். புதிய நத்தம் புல எண். 1648/9 அரசுக்குப் பாத்தியப்பட்டது அதை பொய்யாக எனக்குப் பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல நான் மாடு கட்டி அனுபவித்து வருகிறேன். புதிய நத்தம் புல எண். 1648/9 சந்து வழியாக தான் புதிய நத்தம் புல எண். 1648/7, 8, 10, 13, 14, 17 ஆகிய குடியிருப்புகளுக்கு போக முடியும் என்றால் சரியல்ல.

வழக்கு 2 ம் தபசில் சொத்து புதிய நத்தம் புல எண். 1648/9 பொதுமக்கள் பயன்படுத்தும் பாதை அதனால் நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.05 18:29:05 +0530